★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 25 ஜுலகஜ் 23 இதழ் 240
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11—10—82

# சொலிடாறிற்றிவலசாவுக்கு நோபல் சமாதானப் பரிசு?

(ஒஸ்லோ)

போலந்து அரசாங்கத்திஞல் சிறைவைக்கப்பட்டுள்ள சுதந்திர சொலிடாறிற்றி தொழிற்சங்கத்தலைவர் திரு. வலசாவுக்கு, இவ் வருட நோபல் சமாதானப் பரிசு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோபல் சமாதானப்பரிசுக்கு 79 பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ள போதிலும் திரு. வலசாவுக்கு நிச்சயமாக இப் பரிசு வழங்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

சுதந்திர சொலிடாறிற்றி தொழிற்சங்கம் போலந்து அரசாங்கத்திஞல் கலைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தியத்துறைக்கான நோபல்பரிசு யாருக்கு வழங்கப்படும் என்பது இன்று தெரியும்.

இலக்கியத்துறைக்கான நோபல்பரிசு பிரிட்டிஷ் – அமெரிக்க நாவலாசிரியர்களுக்குகிடைக்கவிருக்கிறது

## பழநி தேவஸ்தானம் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பம்

(சென்னை)

பழநி தண்டாயுதபாணி தேவஸ்தானம் 120 மாணவர்கள் கல்விபயிலும் பல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தை நேற்று ஆரம்பித்துள்ளது.

# என்னை ஏற்பதும் நிராகரிப்பதும் மக்கள்தான்! ஜே. ஆர். அல்ல!!

## யாழ். கூட்டத்தில் 'ஹெக்டர்'

### பொது வேட்பாளஞகவே தேர்தலில் நிற்பதாகவும் கூறுகின்றுர்!

(ஏ. வி. மாணிக்கம்)

"ஜனதிபதி அபேட்சகர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட அன்றே திரு. முதியான்சே தென்னக்கோன், எனது நியமனம் செல்லுபடியாகாது என்று ஆட்சேபனை கிளப்பினுர். அவரது ஆட்சேபனையை ஆராய்ந்த தேர்தல் ஆணையாளர் அவரது ஆட்சேபனையை நிராகரித்து, எனது நியமனத்தை ஏற்றுக்கொண்டார். ஆனுல் ஆட்சேபனை கிளப்பிய திரு. முதியான்சே தென்னக்கோனின் நியமனம் ரத்துச் செய்யப்பட்டது. எனது நியமனத்தை ஏற்றுக்கொள்வதோ நிராகரிப்பதோ பொதுமக்கள்தான் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவோ, கலாநிதி கொல்வின் ஆர். டீ சில்வாவோ அல்ல' என்று ஜனதிபதி தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ. யாழ். திறந்தவெளிஅரங்கில் நேற்று இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர் திரு. குமாரசாமி விநோதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திறந்தவெளி அரங்கின் உள்ளும் வெளியிலும் ஏராளமானேர் குழுமியிருந்தனர்.

நீலநிறக்கொடிகளால் திறந்தவெளி அரங்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திரு, ஹெக்டர் கொப்பேகடுவ மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

### சிறிமாவுக்கு குடியுரிமை

"இம்மாதம் 20ம் திகதி நான் நாட்டின் ஜனதிபதியானதும் 21ம்திகதி அல்லது 22ம் திகதி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை வழங்குவதுடன் வேலைநிறுத்தத்திஞல் பதவியிழந்தவர்களுக்கு வேலைவழங்குவேன். அத்துடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்குவேன்.

"நான் படைபட்டாளங்கள் புடைசூழ ஹெலிக்கொப்டரில் இங்குவரவில்லை. பொது மக்களாகிய நீங்கள்தான் எனக்குப்பாதுகாலவலர்கள்.

"கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி (அனில் முனசிங்கா சார்பு), மகாஜன எக்

[8-ம் பக்கம் பார்க்க]

# மழைவேண்டி வயலின் இசை!

[சென்னை]

மழை வேண்டி வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் நேற்று மாலை சைமாரி பொழிந்தார்.

ஆனுலும் வானம் பொய்த்துவிட்டது!

வரட்சி நிலவும் சென்னை நகரில், குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்துவைக்க வயலின் மேதை குன்னக்குடி ஆர். வைத்தியநாதன் நீர்த்தேக்கத்தின் வரண்ட மணற் பரப்பில் நேற்று மாலை பொழுது மறையும் வேளையில் வருணபகவானுக்கு உகந்த ராகத்தில் நின்றுகொண்டே வயலினை இசைத்தார். ஆனுலும் மழை தோன்றும் அறிகுறிகள் தென்படவில்லை.

சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்னையால் மழைவேண்டித் தொழுகைகளும், பூசைகளும் நடாத்தியும்கூட நேற்றுவரை மழை பெய்யவில்லை என்று சென்னை வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடகீழ் பருவமழை பொய்த்ததால் சென்னை நீர்ப்பிரச்னை விஸ்வரூபம் எடுத்துள்ளது நகருக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளதாகவும் இருக்கும் நீர் ஒரு மாதத்துக்கு மிகக் கட்டுப்பாடான நிலையில் விநியோகிக்கவே போதுமானது என்றும் சென்னை நீரி

(8-ம் பக்கம் பார்க்க)

# "வடபகுதியில் தமிழ் இளைஞர்கள் சுதந்திரமாக நடமாடும் சூழ்நிலையை உருவாக்குவேன்

## சாவகச்சேரியில் கொப்பேகடுவ

[நமது மட்டுவில் நிருபர்]

"நான் ஜனதிபதியாக வந்ததும், தமிழ் இளைஞர்கள் பிரச்னையைத் தீர்த்துவைப்பேன். வடக்கில் தமிழ் இளைஞர்கள் எந்த நேரத்திலும் பயமின்றிச் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவேன். ஐ. தே. க. கொண்டுவந்த பயங்கரவாதத் தடைச் சட்டங்களை தூள்தூளாக்குவேன்."

சாவகச்சேரிச் சந்தை மைதானத்தில் நேற்றுக்காலை நடந்த சுதந்திரக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் ஜனதிபதி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. எஸ். வேலாயுதம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கொப்பேகடுவ மேலும் கூறியதாவது:-

"சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. கொல்வின் ஆர். டீ. சில்வா, நான் வெற்றிபெற்றுலும் தேர்தல் பெட்டிசம் மூலம் பதவியிழப்பேன் என்று கூறிவருகிருர். அவர் ஒரு கிறிமினல் சட்டத்தரணி. நான் பிரபல சிவில் சட்டத்தரணிகளுடன் ஆலோசனை செய்த பின்பே இத்தேர்தலில் போட்டியிடுகிறேன். ஆதலால் அதைப் பற்றி அக்கறைப்படத்தேவையில்லை."

"வடபகுதி மக்கள் 110 ஏக்கரில் மிளகாய், வெங்காயம் செய்து சுமார் 60 கோடி ரூபா அந்நிய செலாவணியைச் சேமித்துத் தந்தனர் இதனை நான் என்றும் மறக்கவில்லை".

முன்னுள் அமைச்சர் திரு. ரி.பி. இலங்கரத்ன பேசுகையில்: வரவு, செலவுத்திட்டத்தில் பல கோடி துண்டுவிழ விட்டதால்தான், தேர்தல் முன்கூட்டி வைக்கப்படுவதாக கூறினுர். (க)

அரிய சந்தர்ப்பம்

**Computer Programming**
**Basic - Cobal - Fortran R.P.G II**

எமது நிறுவனத்தில் உள்ள Computer இல் செய்முறை பயிற்சியளிக்கப்படும்.

றேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங்
HOTEL MANAGEMENT, SPOKEN ENGLISH

மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம்
17 - 10 - 1982

விபரங்களுக்கு உடன் நேரில் வரவும்

**The School of Computer Studies**

52/1, கனகரத்தினம் கட்டிடம்
(வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4808

விசேட அறிவித்தல்

ஷேக் இன்டஸ்ரீஸ் தயாரிப்பான 'வண்டலைற் சோப்'' ஏக விற்பனையாளராக S V. முருகேசு, 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் நியமிக்கப்பட்டுள்ளார் வியாபாரிகள் தமது தேவைகளுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்புகொள்ளவும் வட மாகாணத்தில் வேறு ஏஜென்சிகள் கிடையாது.

ஷேக் இன்டஸ்ரீஸ்
கொழும்பு. 4810

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

6ஆம் தர பிரவேசப்பரீட்சை (யாழ்.மாவட்டம்) விண்ணப்ப முடிவு திகதி 25-10-82 பரீட்சைத் திகதி 20-11-82 பழைய வினாத்தாள்தொகுதி ரூபா 10/- கிடைக்கும் இடம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். 4781

ஒஸ்ரின் மொறிஸ், பொருட்கள் ஏற்றும் (Goods) டீசல் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V. பாலா, துரை ஐயா அவனியூ, அச்சுவேலி. போன்: 207 (4797)

யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அண்மையில் கச்சேரி நல்லூர் றோட், பாரதி வீதி இல. 4ல் காணி விற்பனைக்குண்டு, திருமதி சி பேரம்பலம், 4, பாரதி வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். 4768

இருபாலை கிழக்கு முனி கோவிலுக்கு அருகாமையில் 6½ பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சிவபாலன் 372 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 4799

## தேவை

வர்த்தக, வருமானக் கணக்குகள் எழுதுவதில் திறமையும் அனுபவமும் உள்ள கணக்குப்பதிவாளர் தேவை. சகல தஸ்தாவேஜுகளுடனும் உடன் நேரில் வரவும் றேயல்டிஸ்பென்சறி, யாழ்ப்பாணம். 4802

யாழ்ப்பாணம் றேயல் டிஸ்பென்சறிக்கு திடகாத்திரமும், நல்லொழுக்கமுமுள்ள இரவுக் காவலாளி உடன் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 4801

எமது வைத்தியசாலைக்கு வைத்திய உதவியாளி தேவை. உடன் விண்ணப்பிக்கவும். டாக்டர் வி. வேதநாதன் மக்கள் வைத்தியசாலை, யோகபுரம். 4800

## வாடகைக்கு

மேல் வகுப்பு மாணவிகளுக்கு சைவ உணவுடன் தங்குவதற்கு சகல வசதிகளும் கொண்ட விடுதி உண்டு. தொடர்பு கொள்க. சிவானந்தா மகளிர் விடுதி, இல.50 3-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 4803

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் பயிற்சி 25-10-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4771)

## WANTED

Wanted an experienced Accounts Clerk, with good handwriting and English knowledge, retired government servant too can apply- Salary negotiable. Apply in own handwriting to V Srisakthivel, 601, K. K S Road, Jaffna 4792


சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

# பின்னுறுதிக் கட்டளை

கிளிநொச்சி, எமேசன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு நவரட்ணம் என்பவரின் மரண சாதனமில்லா சொத்துக்கள் விடயத்தில்

மரணமெய்தியவர்

நவரட்ணம் கைம்பெண் புவனேஸ்வரி, எமேசன் வீதி, கிளிநொச்சி.

மனுதார்

வழக்கு இலக்கம்: 208/T

எதிராக

1. நவரட்ணம் நக்கீரன்
2. நவரட்ணம் மகள் சிவாஜினி (பராயமற்றவர்கள்)
3. நவரட்ணம் மகள் சுபாஜினி, மூவரும் எமேசன் வீதி, கிளிநொச்சி
4. தம்பியையா கந்தநாதன், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

(1-ம், 2-ம் எதிர்வாதிகள் தமது வழக்கு பாதுகாவலனாக 4-ம் எதிர்வாதி மூலமாக)

எதிர்வாதிகள்

இவ்வழக்கு 1982-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ந் திகதி சாவகச்சேரி நீதிபதி உயர்திரு. எம். எச். காரியப்பர் முன்னிலையில் மனுதார் சார்பில் அவரின் சட்டத்தரணிகள் பரராஜசிங்கமும், அம்பிகைபாலனும் என்னும் நாமத்தில் செயலாற்றும் திருவாளர்கள் முத்தையா பரராஜசிங்கம், செல்லப்பா அம்பிகைபாலன் அவர்கள் சமுகமாயிருக்க மனுதாரின் மனுவும், சத்தியக்கூற்றும் வாசிக்கப்பட்டு பின்வருமாறு கட்டளை இடப்பட்டுள்ளது.

இக்கட்டளைக்கு மாறான காரணங்கள் ஏதும் இருப்பின் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி அல்லது அதற்கு முன்பாக குறித்த எதிர்வாதிகளால் அல்லது வேறு அக்கறை உள்ளவர்களால் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த காலஞ்சென்ற முருகேசு நவரட்ணத்தின் மரணச்சொத்துக்களுக்கு அவரின் மனைவியாரான குறித்த மனுதார் நிர்வாக தத்துவகாரியாக இத்தால் நியமிக்கப்படுவார்.

மேலும் இக்கட்டளைக்கு மாறான சாரணங்கள் ஏதும் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக குறித்த 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளால் அல்லது அக்கறையுள்ள வேறு எவராலும் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த 4-ம் எதிர்வாதி இம்மனு விடயமாக பராயமற்ற 1-ம், 2 ம், 3-ம் எதிர்வாதிகளின் வழக்குக் காவலனாக இத்தால் நியமிக்கப்படுவார்.

1982-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ந் திகதி.

மாவட்ட நீதிபதி

தயாரித்தவர்கள்:

பரராஜசிங்கமும்

அம்பிகைபாலனும்,

மனுதாரின் சட்டத்தரணிகள்.

(4787)

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

டேவிற்சனை

# விடுதலைசெய்யக் கோரிக்கை

(கிளிநொச்சி)

டேவிற்சனை விடுதலைசெய்து மனித இறைமைக்கு மதிப்பளிக்குமாறு கிளிநொச்சி பிரதேச மாணவர் ஒன்றிய அமைப்பாளர் திரு. வி. தர்மானந்தசிவம் கோரியுள்ளார். இது சம்பந்தமான மகஜர்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ளார். அம்மகஜரில் மாணவர்கள், இளைஞர்களின் சுதந்திர உரிமைகளுக்கு தடையாக இருப்பது மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்றும் தெரிவித்துளளார். [சு]

# படத்திரைநீக்கம்

(நீர்வேலி)

வலி. கிழக்குத் தென்பகுதி ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கடந்தகாலத் தலைவர்களான திருவாளர்கள் ஜி. வைத்திலிங்கம், வ. நடேசலிங்கம், க. மாணிக்கவாசகர் ஆகியோரின் உருவப்படங்கள் சங்கமண்டபத்தில் திரைநீக்கம் செய்யப்பெற்றன. சங்கத் தலைவர் திரு. செ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின்போது கூட்டுறவாளர்கள் பலர் உரையாற்றினர். (அ)

# கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும், தற்போது பாங்கொக் நகரில் ஐக்கியநாடுகள் சபையின் குடிசன மதிப்பு நிபுணராக கடமையாற்றுபவருமான திரு. சின்னத்தம்பி செல்வரத்தினம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி [illegible] 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக அனுப்பிவைத்துள்ளார். கல்லூரிஅதிபர் திருமதி. கலாவல்லி ஆறுமுகதாசன் இவருக்குப் பாராட்டுத்தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் பாடசாலைகள் மூடப்படும்

(வவனியா)

ஜனாதிபதி தேர்தலுக்காக எதிர்வரும் 18-ந் திகதி முதல் 21-ந் திகதி வரை சகல அரசாங்க பாடசாலைகளும் மூடப்படவுள்ளது.

இது தொடர்பாக சுற்றறிக்கைகள் வவனியா மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாதாக கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே வேளை இம்மாத ஆசிரியர்களுக்கான சம்பளம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 15-ந் திகதி வழங்கப்படவுள்ளது.

# "கிராம அபிவிருத்தி இளைஞர்கள் கையில்தான்"

[நீர்வேலி]

'பாரதி காட்டிய வழியில் இன மதபேதமின்றி எல்லோரும் இந்நாட்டு மக்களே என்ற கருத்துடன் கிராமஅபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு கிராமங்களையெல்லாம் முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்று இருபாலை இளைஞர் முன்னேற்றக்கழகம் நடாத்திய பாரதி நூற்றுண்டுவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் போாசிரியர் க. கைலாசபதி குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் திரு. செ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கிராம முன்னேற்றம் இளைஞர்களின் கையில்தான் தங்கியுள்ளது எனவும் அவர்கள் பாரதி காட்டிய வழியில் நின்று கிராமங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

விழாவில் ஆசிரியர் செல்லப்பா, ந. இரவீந்திரன், செல்வி ஜெயகௌரி இரத்தினராசா உட்படப் பலர் பேசினர். கவியரங்கு, கவிதை அரங்கு என்பனவும் நாடகங்களும் இடம்பெற்றன.

திரு த. தணிகாசலத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இவ்விழா திரு. க தர்மகுலசிங்கத்தின் நன்றியுரையுடன் முடிவுற்றது. [அ]

வாழைக்குலை வியாபாரி கொலை:

# சந்தேகநபர் சரண்

(மாவிட்டபுரம்)

ஏழாலை வாழைக்குலை வியாபாரி கொலைச்சம்பவம் தொடர்பாக தேடப்பட்ட சந்தேக நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் புகுந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டார்.

ஏழாலையைச் சேர்ந்த குட்டித்தம்பி கனகேஸ்வரன் (34 வயது) என்னும் வாழைக்குலை வியாபாரி கடந்த மூன்றும் திகதி தமது வீட்டுக்கு சமீபமாக வைத்து கத்தியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக சுன்னாகம் பொலிசார் தம்பிராஜா பாலசிங்கம் என்னும் சந்தேகநபரை தேடிவந்தனர்.

இந்தநபர் மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ம. ஸ்ரீதரன் மூலம் சரண் புகுந்தார். மல்லாகம் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் இவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக கொலையுண்டவரின் மைத்துனரான மகாலிங்கம் என்பவர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் பொலிசாரால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிமெந்துத் தொழிற்சாலை

# தொழிலாளர் சம்பளம்: விசாரணை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்தொழிற்சாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்து யாழ். உதவித் தொழில் ஆணையாளரின்விசாரணை இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்டப் பிரிவில் கட்டிட வேலைப் பகுதிகளில் கடமையாற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுவதாகவும், சம்பள நிர்ணய சபையின் சம்பளத்திட்டத்தின்படி சம்பளம் வழங்கப்படாததால், தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம் தொழிற்திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்திருந்தது.

இதற்கிணங்க யாழ். உதவி தொழில் ஆணையாளர் திரு. அ. மகாசிவம் தொழிற்சாலை அதிகாரிகளையும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரையும் ஏற்கனவே இருதடவைகள் விசாரணைக்கு அழைத்தும் தொழிற்சாலை அதிகாரிகள் சமுகமளிக்காததால் விசாரணை பின்போடப்பட்டிருந்தது.

இவ்விசாரணை மீண்டும் உதவித் தொழில் ஆணையாளர் முன் எடுக்கப்பட்டபோது மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு சு. ஸ்ரீபாஸ்கரன், சட்டத்தரணி திரு. வல்லிபுரத்துடன் ஆஜரானார் சிமெந்துத் தொழிற்சாலை சார்பில் நிர்வாக முகாமையாளர் திரு. எவ். ஜே அந்தோனிப்பிள்ளை ஆஜரானார்.

திரு. அந்தோனிப்பிள்ளை தாம் விசாரணைக்கு ஆயத்தமாக வரவில்லை என்றும், சட்டத்தரணி ஒருவரை ஒழுங்கு செய்ய வேண்டியிருக்கிறதென்றும் தெரிவித்ததைத் தொடர்ந்து உதவித் தொழில் ஆணையாளர் திரு. அ. மகாசிவம் விசாரணையை இம்மாதம 25 ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# நியமனம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். இராசரத்தினம் நுவரேலியா கல்விப் பிராந்தியத்தில் பட்டதாரி ஆசிரியராக இம்மாதம் 5-ம் திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார். [அ]

# இளம்பெண் தற்கொலை

(மாவிட்டபுரம்)

சகோதரிகளுடன் தகராறு செய்த 19 வயது இளம் யுவதியை தாயார் கண்டிக்கவே அவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பலாலி தெற்கு வசாவிளானைச் சேர்ந்த மேரி. கொலெஸ்ரிக்கா என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசு இம்மரணம் குறித்து விசாரணை நடத்தியபோது காலமானவரின் தந்தை நீக்கிலாஸ் ஞானப்பிரகாசம், தாயார் மேரி. ஜோசெப்பின் சகோதரி மேரிதிரேசா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சண்முகராஜா சாட்சிகளை ஆஜர் செய்தார்.


எங்கள் வியாபாரத்தில் உங்கள் பங்குகளுக்கு
ஒரு வருடத்திற்கு 28% வட்டியும்
இலாபத்தில் 2% வட்டி மேலதிகமாக கிடைக்கும்

| | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 1000/- — 5000/- | 24% | 26% |
| 5000/- — 25000/- | 25% | 27% |
| 25000/-க்கு மேல் | 26% | 28% |

**Jaffna Property Trades Ltd.**

3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

போன்: 23698

## அடக்குமுறை அதிகமானல்

# போலந்து மீது அமெரிக்கா கடும் நடவடிக்கை எடுக்கும்!

## ஜனதிபதி றீகன் எச்சரிக்கை

வாஷிங்டன். அக், 10
போலந்தில் அடக்குமுறைகள் அதிகமாகி மக்கள் நசுக்கப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்க அமெரிக்கா ஆயத்தமாக இருக்கிறது என அமெரிக்க ஜனதிபதி திரு, றீகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முதல் கட்டமாகஅமெரிக்கா போலந்துடனை வர்த்தக உறவுகளை துண்டித்துள்ளது.
போலந்திற்கு வழங்கப்பட்டு வந்த வர்த்தக சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனதிபதி இன்று அறிவித்துள்ளார். பிரச்னைக்கு அமைதியான தீர்வுகாணப்படும் என உறுதி அளித்த போலந்து தொழிற்சங்கங்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதினுல் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஜனதிபதி றீகன் தெரிவித்தார்.

வர்த்தக சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் இனிமேல் வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்தை போலந்து பெறமுடியாது எனக்கூறப்படுகிறது.

போலந்து விவசாயபொருட்களையே அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துவந்தது.

இதே நேரத்தில் அமெரிக்காவிடமிருந்து பெற்ற வங்கிக்கடன்களையும் போலந்திடமிருந்து உடனடியாக திரும்பிப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## ஒருநாள் வசூலைக் கொடுக்க முடிவு

சென்னை, அக். 10
மதுரை இராமநாபுரம் மாவட்டத்திலுள்ள தியேட்டர் உரிமையாளர்கள் தங்கள் தியேட்டர்களின் 'ஒருநாள் வசூலை சத்துணவுத்திட்டத்துக்கு வழங்க முடிவுசெய்துள்ளனர். [க]

## லொறி விபத்து: இருவர் பலி

சென்னை, அக். 10
சென்னைக்கருகிதலை லொறிகள் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் இருவர் பலியானுர்கள். 6 பேர் காயமடைந்தார்கள். (க]

## தேயிலை ஏற்றுமதி

சென்னை, அக். 10
தமிழ் நாட்டுத் தோட்டக் கழகத்தினர் முதற்தடவையாக வெளிநாட்டுக்கு தேயிலையை ஏற்றுமதிசெய்பவிருக்கின்றனர். (க]

### பாகிஸ்தானில்

## இரு வழக்கறிஞர்கள் கைது:

### 25 வழக்கறிஞர்கள் தலைமறைவு!

கராய்ச்சி, அக். 10
பாகிஸ்தான் இராணுவச் சட்டத்தைக் குறைகூறிய இரு பிரபல வழக்கறிஞர்கள் இன்று லாகூரி கைதுசெய்யப்பட்டனர். மற்றும் 25 வழக்கறிஞர்கள் இராணுவத்தினரால் தேடப்பட்டுவருகின்றனர். இவர்கள் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

லாகூரில் நடந்த பாகிஸ்தான் வழக்கறிஞர்கள் மகாநாட்டில் இவ்விரு வழக்கறிஞர்களும் இராணுவச்சட்டத்தைத் தாக்கிப் பேசியதாகக் கூறப்படுகிறது.

உடனடியாக இராணுவச் சட்டத்தைத் நீக்கி மீண்டும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டச் செய்யவேண்டும் என்று இவர்கள் பேசினர்களாம்.

இதைத்தொடர்ந்து இராணுவத்தினர் இவர்களைக் கைதுசெய்துள்ளனர். [க]

## பாரதம் வெற்றி

புதுடில்லி, அக். 10
சோவியத் யூனியனுடன் நடந்த மகளிர் ஹொக்கி டெஸ்ட் போட்டியில் பாரதம் வெற்றிபெற்றுள்ளது. (க)

## இந்திரா விஜயம் கம்யூனிஸ்ட்கட்சி திருப்தி

புதுடில்லி, அக். 10
பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சோவியத் விஜயம் முழுத்திருப்தியளித்துள்ளதாக புதுடில்லியில் இரு நாட்கள் நடந்த பாரத கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. [க)

## மாதகல் பகுதியில் வலைத்திருட்டைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

[பண்டத்தரிப்பு]
மாதகல் பகுதியில்அண்மைக் காலங்களில் வலைக்களவுகளும், மற்றும் மீன்பிடிச் சாதனங்களின் திருட்டுகளும் அதிகரித்து வருவதால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் மிகவும், பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைத்தடுத்து நிறுத்துவதற்கு கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மாரீசன்கூடல் கடற்றொழிலாளர் விரிவாக் சேவைச்க சங்கம் கேட்டுள்ளது.

சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. செ. கைத்தாம்பிள்ளை, செயலாளர் திரு. அ. பிரான்சிஸ் ஆகியோர் கையொப்மிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''கடந்த 1980 ம் ஆண்டில் கடற்றொழிலாளர் விரிவாக்க சேவைச் சங்கங்கள் இப்பகுதியில் அமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கிய பின்பு வலைத் திருட்டுக்கள் இப்பகுதியில் பெருமளவில் குறைந்து வந்துள்ளன, கடற்றொழிலாளர்களும் நிம்மதியாக இருந்தார்கள். அண்மையில் இப் பகுதியில் மீண்டும் இத் திருட்டுகள் மிகவும் மோசமடைந்துள்ளன, பொலிசாரின் ரோந்தச் சேவை தற்போது இப்பிரதேசத்தில் மிகவும் குறைந்திருப்பதால் இத்திருட்டுகள் அதிகத்து வருகின்றதாக கருதுகின்றேம். கடந்த வாரமும் மாதகலைச்சேர்ந்த ஒருவரின் வள்ளமுப், வலைகளும் திருட்டுப்போய்' பின்பு எமது சங்கம் கொடுத்த தகவல் காரணமாக மயிலிட்டியில்'பொலிசார் அவற்றைக் கைப்பற்றியுள்ளார்கள்.

ஆகவே இதுபற்றி துரித நடவடிக்கை மேற்கொண்டு இப்பகுதி ஏழை மீனவர்களை காப்பாற்றுமாறு வேண்டுகின்றனர்.

இந்த மகஜரின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை தொகுதி எம், பியுமான திரு அ. அமிர்தலிங்கம், யாழ். கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கங்களின் சமாஜம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, [க]

## அரபாத் - ஹுசென் பேச்சுவார்த்தை!

லண்டன், அக். 10
பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு. அரபாத் இன்று அம்மான் போய்ச்சேர்ந்தார். ஜோர்டான் ஜனதிபதி ஜஹுப் ஹுசெனுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சகல இஸ்ரேல் படைகளும் வெளியேறவேண்மென்று அரபாத் தெரிவித்துள்ளார்.

லெபனுனை விட்டு இஸ்ரேலியர் வெளியேறியபின்னர், முதற்தடவையாக அரபாத் அம்மான் சென்றுள்ளார்.

அமெரிக்காவின் சமாதானத் திட்டம்பற்றியும் இவர்கள் ஆராய்ந்தனர். (க)

## 1985-ல் காங்கிரஸ் நூற்ருண்டு விழா

புதுடில்லி, அக். 10
1985-ம் ஆண்டு காங்கிரஸ் நூற்ருண்டு விழாவை பெருமளவில் கொண்டாட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (க)

## ஆப்கான் பிரச்னை அரசியல் தீர்வு அவசியம்

லண்டன், அக். 10
ஆப்கானிஸ்தான் பிரச்னைக்கு அவரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று ஐ. நா. மண்டலசார்பற்ற நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## ஆதி திராவிட இளைஞருக்கு

# முப்படைப் பயிற்சி அளிக்க பத்து லட்சம் ரூபா ஒதுக்கீடு!

சென்னை. அக், 1
தமிழ்நாட்டிலுள்ள 16 மாவட்டங்களில் 100ஆதிதிராவிட இளைஞர்களுக்கு பயிற்சி நிலையங்களில் இருவாரகாலப் பயிற்சி அளிக்கப்படும்

ஒவ்வொருமாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் பொறுப்பில் இந்தப்பயிற்சி நடைபெறும்

2 மாத காலப்பயிற்சி முடித்ததும் மத்திய அரசின் இராணுவ தேர்வுக்கு இவர்கள் அனுப்பப்படுவார்கள். தேர்வில சித்திபெறுதவர்கள் தமிழ்நாடு பொலிஸ் தேர்வில் பங்குபற்றுவார்கள்.

பயிற்சி காலத்தில் இவர்களுக்கு வழங்கும் உணவு, உடைகளுகு மாநில அரசு 10 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

திருநெல்வேலியில் நடைபெற்றுவந்த பயிற்சி நிலையம் வெற்றி அளித்தள்ளதாகஅறிவிக்கப்பட்டுளது

100 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு மோட்டார் வாகனப் பயிற்சியும் 100ஆதி திராவிட இளைஞர்களுக்கு மோட்டார் பராமரிப்பு பயிற்சியும் அளிக்க தமிழ்நாட்டிலுள்ள 8 போக்குவரத்து கழகங்கள் சம்மதம் தெரிவித்துள்ளன. இதற்கென போக்குவரத்து கழகங்களுக்கு 8லட்சம் ரூபா மான்யம் வழங்கப்படும்.

அந்தந்த போக்குவரத்துகழகங்களில் பயிற்சி முடிந்ததும் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

ஆதிதிராவிட குடியிருப்புபகுதிகளுக்கு ஒரு தொலைக்காட்சி பெட்டி வீத வழங்கப்படவுள்ளது.

செங்கல்பட்டு, வடஆற்காடு பகுதிகளில் 50 ஆதிதிராவிட குடியிருப்புக்கு 50 தொலைக் காட்சிப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது மத்திய அரசும், மாநில அரசும் இதற்கான செலவுகளை சமமாக ஏற்றுக் கொண்டன. (க)

## விநியோகம்

(மன்னுர்)
மடுப்பகுதியில் கொடிய வரட்சியினுல் குடிநீருக்கே பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்ட போதிலும் மடுமாதா திருநாள் உற்சவத்தில் கலந்து கொண்ட சுமார் ஒன்றரை லட்சம் யாத்திரீகர்களுக்கு 2 பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

மன்னுர் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் எடுத்துக் கொண்ட முயற்சியினுலேயே இரண்டு பவுசர்கள் குடிநீர் விநியோகத்தில் ஈடுபடுத்தப்பட்டன, (க)

## மணிவாக்கு

போனகமென்பது தானுழந்துண்டல்
—ஒளவையார்

# நமது நோக்கு

## விடயம் வெளிக்குதா?

"உரிமைகள் இழந்து உதாசீனப்பட்டு, ஒன்றுக்கும் வழியற்றவர்களாக வீண் கனவு காண்பது எத்தனை காலம்?"

இன்றைய ஆட்சியைப் பார்த்து, இந்தத் தேர்தல் கட்டத்தில் ஒரு ஏழை விவசாயி, தொழிலாளி ஏன் ஒரு நடுத்தரவர்க்கத்தினர் இந்த வினை எழுப்புவது அர்த்தமற்றதா?

பத்து அனுமதிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் ஆறு ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களும் இன்று நடைபெறும் தேர்தல் பிரசாரத்தில் முழுமூச்சுடன் செயற்படுகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதில் பங்குபற்றாது "மௌனம் கலக நாஸ்தி" என்ற கொள்கையை விரதமாகக் கொண்டிருந்த போதும், மௌனத்தைக் கைவிடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பொது மக்கள் விவேகம் மதிக்க முடியாத செல்வம்.

நாம் மேலே எழுப்பிய கேள்வி நாட்டின் பெரும்பான்மையான ஏழைமக்கள் சார்பில்; அதனை அடுத்து தமிழ் மக்களுக்குப் பொருத்தமான முறையில் காரசாரமாக தனது அறிக்கையில் விளக்கியிருக்கிறது தமிழர் சுயாட்சிக்கழகம்.

எங்கள் நேற்றைய பத்திரிகையில் காணப்படும் அந்த அறிக்கையின் பகுதி சில விடயங்களை தெளிவாகவும் தாராளமாகவும் விளக்குகின்றது.

"ஆனால் இன்றைய அரசைப்போல வேறு எந்த அரசும் பலாத்காரத்தினால் தமிழ் இனத்தைப் பயமுறுத்தி பயங்கரவாதத்தினால் அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுத்தது கிடையாது" என்கிறது தமிழர் சுயாட்சிக் கழகம்.

தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்த தலைமையில் உருவானதொன்று இருப்பினும் அடைப்படைக் கொள்கையில், நோக்கத்தில் மாற்றம் அதிகம் இருக்க முடியாது.

எனவே சுயாட்சிக் கழகத்தின் இன்றைய ஆட்சியைப் பற்றிய கணிப்பை, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சேபிக்கத் துணியாது.

நாமொருபடி மேலே போய் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அமுல் நடத்துகின்ற இந்த அரசு நாட்டின் எந்தப்பகுதியில்வாழும் எவருக்கும், எந்த இனத்துக்கும் அச்சட்டம் அவசியமானால் அதனை உபயோகிக்கத் தயங்காது என்று கொள்கின்றோம். இதற்கு ஆதாரம் உண்டென்பதை வாசகர்கள் அறிவார்கள்.

அரசின் ஆட்சிமுறை, அடக்குமுறை, பயங்கரவாதம், அடக்குமுறையால் அகன்றதாய்த் தெரியவில்லை. நாட்டை ஆட்சி செய்பவர் எவ்விதத்திலும் பயங்கரவாதத்துக்கு மாற்று மருந்து கண்டேயாக வேண்டும். வடக்கென்றால்என்ன, தெற்கென்றால் என்ன.

1971-ல் தெற்கில் நடைபெற்றதை நாம் மறக்கவில்லை. ராணுவ பலத்தினால் அது அடக்கப்பட்டதை மக்கள் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியென்று கருதிய போதும், பயங்கரவாதம் தோன்றிய காரணத்தை அணுகி அதற்கு பரிகாரம் காண்பதில் தோல்வியடைந்ததால் அந்த ஆட்சியே மண்கவ்வியது.

இன்றைய நிலை பெருமளவுக்கு மாறுபட்டிருக்கிறது சிறப்பாக பயங்கரவாத தடைச் சட்டம் ஒரு சாதாரண சட்டம் போல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எத்தனை பேர் என்ன சாட்டிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்?

"புலிகளைத் தேடி பூண்டோடு அழிக்குமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனா விடுத்த கட்டளை" இன்னும் பூர்த்தியாகவில்லை. அது வெற்றி பெற்றிருந்தால் ஒருவேளை இக்கொடூரமான இச்சட்டம் நீக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சிங்களவர் வேறொருமூலையில்தொடங்க முடியாதா? தேர்தல் காலத்தில் மிக அவசியமான கேள்வி இது.

எனவே இக் கொடிய சட்டத்துக்கு அரசைப் பொறுத்தளவில் அவசியம் இருக்கலாம். ஆனால் எவ்வாறு அமுல் படுத்தப்படுகின்றதென்பதே பிரச்சனையின் உள்ளுடன்.

இச்சட்டத்தின் பிரகாரம் எழும் கட்டளை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் கட்டளை என்பதை உணர்க. ஜனாதிபதியின் அதிகாரம் இன்றைய அரசியல் அமைப்பில், எதனையும் எந்தவகையிலும் செய்துமுடித்து, பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைக் கட்டாயப்படுத்தும் நிலை.

இன்றைய ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி என்று நாம் வர்ணிக்கவில்லை; ஆற்றலும் அனுபவமும் மிக்க அரசியல்வாதி. அதிகாரம் இருந்தபோதும் அதனை விவேகமாக உபயோகிக்கும் சாதுர்யம் பெற்றவர்; எனவே இவ்வளவு ஆதரவு அவருடைய கட்சி அளித்து வருகிறது.

நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம், பல கட்சிகளாலும், வேட்பாளர்களாலும் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது, இன்றைய ஜனாதிபதியோ அல்லது இன்னொரு ஜனாதிபதியோ இந்த மட்டற்ற அதிகாரத்தை துஷ்பியோகம் செய்யமாட்டாரென்பதை இன்றைய நிறைவேற்று அதிகாரம்படைத்த ஜனாதிபதி ஆட்சி அமைப்பு உறுதிப்படுத்த மாட்டாது.

இதனை ஏற்றுக்கொள்கிறவரனைவரும் எதிர்க்கட்சிகள் சார்பில் ஒருங்கிணைந்து வாக்களிப்பதால் இதனை மாற்றியமைக்கமுடியும்.

தேர்தல் பிரசாரத்தின் சிறப்பான அம்சம் முக்கிய எதிர்க்கட்சிகள் அனைவரும் இக்கருத்தில் ஒற்றுமைப்பட்டிருப்பதே!

**தங்களுக்குள் வேற்றுமை** பாராட்டி மோசம் போகாமல் தேர்தலில் வெல்லும் சாத்திய முடையவர்க்கே ஒன்றுபட்டு வாக்களிப்பது கட்டாயமாகின்றது.

பொது மக்களுக்கு விடயம் வெளித்துவிட்டால், கட்சியும் கததரிககாயும் என்று சொல்லிக் 'கற்றகயவரைத்' திட்டிவிட்டு தகுந்த பாடம்படிப்பிக்க இடமுண்டு.

---

★ யாழ்ப்பாணத்தின் மூன்று கண்கள்

# அருணாசல மகாத்மியம்

(நேற்றைய தொடர்ச்சி)

இவர் காரைதீவு அருணாசல உபாத்தியாயர் என்றும், அவர் சைவஉபாத்தியாயர்களை உண்டாக்குதற்குச் சைவப் பிள்ளைகளைத்தேடி அலைகிறவரென்றும் ஒருவர் சொன்னார். அவர் பெருந்தகைமைகளை யான் அப்பொழுது அறியவில்லை. என்படிடபைக் குழப்பித் தம்வசப்படுத்த முயலுகிறார் என்று மாத்திரம் எண்ணினேன். அவரது மூளைக் கொதிப்பை உணருதற்கு அப்பொழுது நான் யார்?

### அருணாசல மகாத்மியம்:

மற்றொருநாள் நாவலர்தமையனார் குமாரர் மனேஜர் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்களுடன் திரு. அருணாசல உபாத்தியாயர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். உபாத்தியாயர் போனபின்பு கனம் மனேஜர் அவர்களை 'அவர் யார்' என்று கேட்டேன். அவரா? அவரை இன்னும் அறியாயா? 'அவர்களுக்குப் பிறகு அருணாசலந்தான் இந்த நாட்டில் ஒரு மனிதர்' என்று, அருணாசலம் அவர்களின் சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாகச் சொன்னார்கள். அவர்களென்று மனேஜர் அவர்கள் சொல்லுவது நாவலர் அவர்களை.

நாவலரையன்றி மற்றெவரையும் மதித்துப் பேசியறியாத மனேஜர் அவர்கள், அருணாசலம் அவர்களைப் பற்றி 'நாவலருக்குப்பின் ஒரேயொரு மனிதர்' என்று வருணித்ததைக் கேட்டுப் பிரமித்துப் பேனேன். அருணாசலம் அவர்கள் கிறிஸ்த வலையில் அகப்படாது தப்பியதும், முப்பது வருட காலம் சைவ உபாத்தியாயர்களை ஆக்கும் சைவாசிரிய கலாசாலையொன்றைத் தாபிக்க அலைந்தலைவுகளும், நல்லூர் மணியடிக்குப்போது நாலரை மணிக்குத் தாம் தெருக்கதவைத் திறக்கும்போது அருணாசலம் அவர்களை நினைத்துக்கொண்டு திறப்பதும், பனிக்காலத்தில் காரைதீவிலிருந்து நடந்து வந்து தம்மைச் சந்திக்கும் பொருட்டு வாய்தலில் பொட்டாக்கிட்டுக்கொண்டு காத்திருப்பதும், கோப்பாய் ஐக்கிய போதனா ஆசிரிய கலாசாலை அருணாசலம் அவர்களின் பேருழைப்பே என்பதும் பிறவுமான சரித்திரங்களையெல்லாம் அவர்களிடம் அறிந்தேன்.

### என் ஒடுங்கிய அறிவு

அருணாசலம் அவர்களின் முப்பது வருட முயற்சி, நாவலர் அவர்கள் முப்பது வருடத்துக்கு மேலே செய்தவைவத்த முயற்சிகளின் ஒரு பகுதியை ஓரளவுக்குப் பயன்செய்தற்குரியதென்றோ, சைவக் குழந்தைகள் கிறித்த பள்ளிகளில் அறிவு சூனியமாகச் சடப்படுத்தப்படுவதை அருணாசலம் அவர்களாற் சகிக்க முடியவில்லையென்றோ அப்பொழுது என்னால் அறியமுடியவில்லை. நான் எப்படி இளமையிற் சடப்படுத்தப் பட்டிருந்தேன் என்பதைக்கூட நான் நினைக்கவில்லை. எனக்குக் கிடைத்த வாய்ப்பைப்பயன்... கொண்டிருப்பதே ... யாயிருந்தது. இ... ஆள் பற்றிய சிந்தனை... வரவில்லை: கடவுள்...

### எனது நாணம்

மனேஜர் அவர்கள் ... லுப்போது அ... அவர்களை நான் மதிக்கவில்லையேஎன்... தான் என்பாற் குடி...

### அருணாசலம் அவர்களின் த...

1916 ஆம் ஆண்டு... கம் அருணாசல உ... ரின் தவம் ப... தொடங்கியது. ... தியாயர்கள் உதய... அரைகுறை மத மா... களும் வெளிப்படை... களாய் அருணாசலம்...

## பண்டிதமணி சி. கணபதிப்பி...

...களைத் தொடர்ந்தார்... உபாத்தியாயர்கள் ... பார்கள் என்ற எண்... ஆங்காங்குச்சைவப் ... மூலைகொள்ளத் ... கின. டாதிர்யாருக்... தொரு தலையிடி ... யது.

### புதிய தலையிடி

நாவலர் திட்டமி... வல்ல உபாத்தியா... 'அன்சேட்டிவிக்கற்' ... தராதர பத்திர உ...

---

# மக்கள் கருத்து

## கழிவுநீர் வாய்க்காலை சீர்செய்க

தெல்லிப்பழை வைத்தியசாலைக் கழிவுநீர் ஓடும் வாய்க்கால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. நீண்டகாலமாக இப்பிரச்சனை தீர்க்கப்படாமல்இருக்கிறது. எமது தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் இதுபற்றி உரிய இலாகாவிடன் முறைப்பாடு தெரிவித்திருந்தது. எனினும் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் தொடர்ந்தும் தெல்லிப்பழைக் கிராமத்தைச் சுற்ற உள்ள கிராமங்களும், அவ்வாய்க்கால் அண்டிய வீதியால் செல்லும் நோயாளர்களும் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள். அத்துடன் மழைகாலங்களில் இவ்வாய்க்காலூடாகவே மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய நிலை ஏற்படுமாகையால், அதனால் எமது மக்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே கூடிய விரைவில் எமது மக்களின் நலன்கருதி அவ்வாய்க்காலை சற்று ஆழமாக வெட்டி கழிவுநீர் வடிந்துசெல்லக்கூடியவாறு செய்யுமாறுசம்பந்தப்பட்ட இலாகாவைக் கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் குறிப்பிட்ட இடத்தைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் கரைக்கட்டு கட்டாதபடி இருக்கிறது. அதனைத்தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தெல்லிப்பழை வர்த்தலை விளானூடாகச் செல்லும் பிரதான வீதியின் கரைப்பகுதிகள் உடைந்த நிலையில் நீண்டகாலமாகக் காணப்படுகின்றன. இதனால் கல்லூரி மாணவர்கள் முதல் பாதசாரிகள், வாகனாதிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனையும் தீர்க்க வீதிப்புனரமைப்புப் பகுதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சி. உதயகுமார்
வர்த்தலைவிளான்,
தெல்லிப்பழை.

9 விருத்திகரமான ஆயுட் திட்டங்கள்

பயன்படுத்திக்
ஏன் வேலை
இரண்டாம்
தனை எனக்கு
ள் தரவில்லை.
ம்
ர்கள் சொல்
அருணாசலப்
தக்கவாறு
என்ற நாணம்
குடியிருந்தது.

தபோபலம்
ண்டு தொடக்
உபாத்தியாய
பயன்செய்யத்
சைவ உபாத்
தயமாணர்கள்
மாற்றக்காரர்
படைச் சைவர்
சலம் அவர்

பிள்ளை

தார்கள். சைவ
கள் கிடைப்
எண்ணத்தால்
வப் பள்ளிகள்
தொடங்
ருக்குப் புதிய
டி உண்டாகி

டி
டமிட்ட கற்று
தியாயர்களுக்கு
கற்' வழங்கி,
உபாத்தியா

யர்களுக்குத் தலைமைப்பதவி வழங்கிய பாதிரிமாருக்கு, அவர்கள் கண்டவழியைத் திரு. அருணாசலம் அவர்கள் மேற்கொண்டதனால், புதிய தலையிடி தோன்றி ஆறுக்கவலை அளிப்பதாயிற்று.

இந்நிலையில் அருணாசலம் அவர்களுக்கு அழைப்பு வந்துவிட்டது, வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்தது. 17-1-1920இல் மகான் அருணாசலம் மறைந்தார்.

(நாளை முற்றும்)

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

### "தமிழ் மகன் போட்டியிடுவதால்

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு தோல்வியே ஏற்படும்'

## பேசாலையில் குமார் ஆரூடம்

[மன்னார்]

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு வாக்களிக்க வேண்டாமென தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம் ஆகியோர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பத்திரிகைகள் மூலம் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டால் தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்கிறேன்.

பேசாலை – சென்யூட்ஸ்வீதி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்காங்கிரஸ் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: இன்றைய அரசியல் சாசனச்சட்டப்படி ஜனாதிபதியே முழு அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு அக்கால அரசர்கள்போல் ஆட்சிநடத்தி வருகிறார். ஐ. தே. கட்சியின் 78ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின்படி பாராளுமன்றத்தில் வேறுகட்சியைச் சேர்ந்த எம். பி.க்கள் அதிகமாகஇருந்தால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்தலாம். இப்படிஎத்தனை முறை வேண்டுமானாலும் பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி சார்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்தவர் பாராளுமன்றத்தில் கூடிய ஆசனங்களைப்பெறும்வரை பொதுத் தேர்தலை நடத்தலாம்.

ஏனைய நாடுகளில் ஜனாதிபதிக்கு ஒரு உபஜனாதிபதியுண்டு. இலங்கையில் மட்டும் அப்படியில்லை. இலங்கையிலும் ஒரு உபஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டால் அவருக்கும் சில அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்பதற்காகவே இலங்கையில் உபஜனாதிபதி இடம்பெறவில்லை. இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலை உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துவருகின்றன.

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் போட்டியிடாது சிங்களவரே வெற்றிபெற்ருல் சிங்கள ஆட்சியையே தமிழ் மக்களும் விரும்புகின்றனர். அதனால் தான் தமிழ்மக்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லையென சிங்கள அரசியல் வாதிகள் வெளிநாடுகளில் பிரசாரம் செய்வார்கள். இப்பிரசாரத்தையே உலகநாடுகளும் ஏற்கும்.

தமிழ்இனம் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறது. தனிநாடு ஒன்றே தமிழ்இனத்தின் லட்சியம். தமிழ்இனம் சுதந்திரமாக வாழவிரும்புகிறது.


சிங்களவர்கள் தமிழ்மக்களை ஆளுவதை தமிழ்மக்கள் விரும்பவில்லை என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டவே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன்.

ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ்மகன் போட்டியிட வேண்டுமென நான் கடந்த ஏப்ரல் மாதமே தெரிவித்துவிட்டேன் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மகன் ஒருவர் போட்டியிடுவதுபற்றி திரு. அமிர்தலிங்கம், திரு. தொண்டமான் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

குட்டிமணி தமிழரசுக் கட்சியின் சார்பிலும் நான் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பிலும் ஜனாதிபதி தேர்தலுக்கான மனுவைத்தாக்கல் செய்வோம் என்றும், குட்டிமணியின் மனு நிராகரிக்கப்பட்டால் நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதெனவும் குட்டிமணியின் மனு ஏற்கப்பட்டால் நான் குட்டிமணியின் மேடையில் ஏறி அவருக்காக தேர்தல் பிரசாரம் செய்வதாகவும் திரு. சந்திரகாசனிடம் சொன்னேன் அவர் மறுத்துவிட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் ஜே. ஆர். ஜயவர்த்தனவைத் தோற்கடிப்பதே எனது நோக்கம். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மகன் ஒருவன் போட்டியிடுவதால் ஐ. தே. கட்சிக்கு தோல்வியே ஏற்படும். ஆதலால் என்னை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவேண்டாமென ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 4 அமைச்சர்களும், 5 ஐ. தே. க. செயற்குழு உறுப்பினரும் என்னைச் சந்தித்துக்கேட்டனர் நான் மறுத்துவிட்டேன்.

(க)

தேசிய
வழியில்
ஆயுள்
காப்புறுதி செய்யுங்கள்

புதிய ஆயுட் திட்டங்கள் ■ சகாய தவணைக் கட்டணங்கள்

தேசியம்... காப்புறுதியில் ஒரு புதிய அனுபவம்

NATIONAL INSURANCE CORPORATION

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
ஆயுட் காப்புறுதிப் பிரிவு
ஈ. எச். குறே கட்டிடம், 411, காலி வீதி, கொழும்பு 3
தொலைபேசி: 548436.


Almeida Associates

வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு

# 20-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

காலங்கள் உதிர்ந்து
மறைந்து கொண்டேயிருக்கும்
ஆனால்-
உங்களின் இனிய நினைவுகள்
என்றும்– பசுமையாய்
உயிர்த்தே இருக்கும்.
உங்களின் பாதச்சுவடுகள்
எங்கள் பாதையின்–
வழிகாட்டியாக,
ஒளியூட்டி நிற்கும்போது
என்றும் எங்களுடன்
கூடவே இருப்பீர்கள்.....
கூடவே வருவீர்கள்.....

நிரந்தர சாந்தி
உங்கள் ஆத்மாவின்
தெய்வீக
உறைவிடமாகட்டும்.



தொழிலதிபர்
அமரர்
## சிவக்கொழுந்து சிவஞானம்

தோற்றம்: உருதுரோற்காரி வருடம் மாசி மாதம் 18-ம் திகதி 1924
மறைவு: சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 5-ம் திகதி 22-9-1962


## ஸ்ரீராம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் புரோஸஸிங் கொம்பனி லிமிட்டெட்

## SRIRAM'S TEXTILE PROCESSING COMPANY LIMITED

Irupalai Road,
KOPAY.

இருபாலை வீதி,
கோப்பாய்.

Telephone: 24087

## ஆசிரியர்கள் கூட்டணி கோரிக்கை

சென்னே, அக். 10

மதுரை ஆசிரியர்கள் கூட்டணி, பாடசாலைகளில் சத்துணவு வழங்கும் பொறுப்பிலிருந்து தங்களை விடுவிக்குமாறும், வேறு ஏற்பாடு செய்யுமாறும் தமிழ்நாடு அரசிடம் கோரியுள்ளது. (க)


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15 9-15
சனி, ஞாயிறு 2-30
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சில தினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு — சுபாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

மனோகரா [யாழ் நகர்]
9-10-82—12-10-82
10-30 am, 2-15.4-45, 7-00, and 9-30
SPHINX
Color Scope

றீகல் 4-வது ஹவுஸ்புல் வாரம். 30,
[யாழ். நகர்] 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி யாழ். நகர்]
Daily 5 shows
DOM DE LUISE
in
HOT STUFF
Action-Comedy-Color

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ரயில் பயணங்களில்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி 5 காட்சிகள்
VAMPIRE CIRCUS

ராணி (யாழ் நகர்)
தினசரி 5 காட்சிகள்
EYE WITNESS

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

வின்ஸர் குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ராஜா (யாழ்.நகர்)
ஹவுஸ்புல்! ஹவுஸ்புல்!! ஹவுஸ்புல்!!!
மாதர் கூட்டம் அலைமோதுகிறது
1. தங்கம்மா- என்ன போடி யார் அம்மான் எல்லாரும் வீட்டோடஓடுறீங்க.
2. போடியார்- இல்லைபிள்ளை, வந்தாலும் வந்தது ஒரு படம் மௌனகீதங்கள் வீட்டில இருக்க விடுகிறுன்களில்லை.
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன் வெள்ளிவிழாப்பட இயக்குநர் பாக்கியராஜ்


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 25ம் திகதி

திங்கட்கிழமை

(11—10—82)

மேடம்: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும், திறமைக்கு முதலிடம் உண்டு, பெரியவர்களின் ஆதரவும் பெருகும், புதிய வெற்றிகளும் உண்டு.

இடபம்: பொருள்வரவு, உற்சாகம், பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கலாம், நல்ல நாள்.

மிதுனம்: கருடப்பார்வை உங்களை வட்டமிடும், எதிர்பாராவகையில் பொருட்செலவிற்கும் இடமுண்டு, தொழில் துறையில் சிறிது மனக்கசப்பு தென்படலாம்.

கடகம்: அ சிரா படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இளக்க நேரிடும், மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப் டலாம் அன்பாக நடந்துகொள்ளவும்.

சிங்கம்: இல்லம் இன்று கட்டிவெல்லம்போல் இனிக்கும், இன் சொல்லின்மூலம் மற்றவர்களைக் கவருவீர்கள், பொதுத்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

கன்னி: உணர்ச்சிமயமான தினம், மனப்போராட்டங்கள் இடம்பெறும். குடும்பத்தில் மோதல்கள் ஏற்படும், மனதில் விரக்தி தோன்றும்.

துலாம்: தேனான சம்பவங்கள் இடம்பெறும், தேடியது கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் நிம்மதியான தினம்.

விருச்சிகம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்கட்கு அது மேலும் குட்டி போடும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தனுசு: வாய்வுக் கோளாறினால் வேதனைப்படுவீர்கள், உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், எதிரிகளின் சோழைத்தனமான நடவடிக்கைகள் உங்கள் நிம்மதியைக் குலைக்கும்.

மகரம்; இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும், பெற்றோர் ஆதரவும் உண்டு.

கும்பம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும், வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம், பொருட்செலவும் உண்டு.

மீனம்: பிதாவழியில் மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும், புண்ணிய காரியங்களில் மனம் நாடும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## ரூபா 200 அபராதம்

(சாவகச்சேரி)

மீசாலையைச் சேர்ந்த வே. விநாசித்தம்பி என்பவர் சாரதிப் பத்திரமில்லாது மினிபஸ் ஓட்டிச் சென்றதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எஸ். யேசுதாசன் எதிரிக்கு 200 ரூபா அபராதம் விதித்ததுடன், மேலதிகமாக பிரயாணிகளை ஏற்றியதற்காக மேலும் 120 ரூபா அபராதம் விதித்தார். (க

## தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி

(வவனியா)

வன்னி தேர்தல் தொகுதி தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியாக வவனியா அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திசபை செயலாளருமாகிய திரு. கே. ஸி. லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார். முல்லைத்தீவு பகுதிகளின் வாக்குகள் வவனியா கச்சேரிக்கு கொண்டுவந்தே எண்ணப்படவுள்ளது.

## உரவகை விலை குறையாது

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் தமக்கு தேவையான உரவகைகளை கூடுதலாக வாங்கி சேமித்து வைக்குமாறு விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் திரு.கே. அரசகுலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலபோக வேளாண்மை ஆரம்பித்துள்ளதால் முன்கூட்டி உரவகைகளை சேமித்து வைப்பதன் மூலம் நெருக்கடியை தவிர்க்க உதவும் இப்பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்களில் போதிய அளவு உரம் மற்றும் இரசாயன பொருட்கள் கையிருப்பில் உள்ளது என்றும் குறிப்பிட்ட திரு. அரசகுலசிங்கம் எக்காரணம் கொண்டும் உரத்தின் விலை குறைய வாய்ப்பு இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

பொலிஸ் ஒத்துழைப்புடன்

# சுன்னுகம், கோப்பாய் பகுதிகளில்விழிப்பு குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம்- கோப்பாய் பொலிஸ் பகுதியில் பொலிசாரின் ஒத்துழைப்புடன் விழிப்புக் குழுக்கள் செயல்படத் தொடங்கியுள்ளன

இப்பகுதிகளில் குற்றச்சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறுமல் தடுக்கும் முகமாக சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன் சுகுணேந்திரன் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின்பேரில் விழிப்புக்குழுக்கள் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன.

உடுவில்-மானிப்பாய் பகுதிகளில் நூற்றுக்குமேற்பட்டோர் சுன்னுகம் பொலிசாரின் உதவியுடன் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அண்மைக்காலங்களில் நடைபெற்ற பல கொள்ளைச் சம்பவங்கள் பற்றி பொதுமக்கள் பொலிசாருக்குக் கொடுத்த இரகசியத் தகவலினல் கொள்ளையடித்தவர்கள் பிடிபட்டதுடன், கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

விடுதலை இயக்கம் என்ற போர்வையில் அப்பாவிப் பொதுமக்களின் உடைமைகளைச்சூறை ஆடுபவர்களை இனம் காணவேண்டுமென்று யாழ், எம். பி, திரு. வை.யோகேஸ்வரனும் பலபொதுக்கூட்டங்களில் உரையாற்றியிருந்தார்.

யாழ். மாவட்டத்தில் சில சிறு சிறு திருட்டுச் சம்பவங்களை தவிர பெரிய சொள்ளைச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளன.

எதற்கும் பொலிசாரை நம்பி இருக்காமல் பொதுமக்களும் விழிப்பாக இருந்து கொள்ளையமப்பவர்களை முறியடிக்க வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் இப்பொழுது நிலவுவதாகத் தெரிகிறது. (மா)

## அமரர் சிவதாசன்

இலங்கை மின்சாரசபை யாழ். பிரதேச பொறியியலாளர் சந்திரசேகர் சிவதாசன் அமரத்துவமெய்தி இன்றுடன் ஒரு திங்கள் கடந்துவிட்டது. நாற்பத்தேழு அகவை இப்பூவுலகில் வாழ்ந்த அமரர் சிவதாசன் குறிப்பிடத்தக்க சாதனைகளை தான் சார்ந்த துறைகளில் ஏற்படுத்தியுள்ளார்,

சாதாரண பொறியியலாளராக பதவி ஏற்ற சிவதாசன் தமது திறமையால் மிகக் குறுகிய காலத்தில் பட்டப் பொறியியலாளர் பட்டத்தைப்பெற்று பதவி உயர்வும் பெற்றுர். இலங்கை மின்சார சபை யாழ். பிரதேச பொறுப்பையேற்றகாலம்முதல் அன்னுர் இப்பிரதேசத்திற்கு மின்வலு மூலம் எத்தகைய பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தலாமோ அத்தனையையும் இயற்ற உழைத்தார். சிறப்பாக யாழ். பிரதேச விவசாயிகள் மின்வலுவைப்பெற்று தங்கள் உற்பத்திச்செலவை குறைப்பதற்கு சிவதாசனின் திட்டம் பெரும் உதவியாக அமைந்தது.

அறிவியலாளரான சிவதாசனுக்கு ஆன்மீகத்துறையிலும் ஈடுபாடு இருந்து வந்தது. கைதடி மடத்து கந்தசாமி ஆலய மின்னிணைப்பினை உபகரித்து அன்னுர் புரிந்த திருப்பணி குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். பிரதேச மின்பாவனையாளர்கள் சிறப்பாக மின்வலு வைப்பெற்ற விவசாயிகள் மத்தியில் சிவதாசன் நினைவு என்றும் நிலைத்து நிற்கும்.

நா. திருநாவுக்கரசு

## கோவிலாக்கண்டியில்

### செல்வா ச. ச. நிலையம்

[யாழ்ப்பாணம்]

கோவிலாக்கண்டி 4-ம் வட்டாரத்தில் செல்வா சன சமூக நிலையம் கடந்தவாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது! இதன் உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:

தலைவர் திரு. பொ சரவணதயாளன் செயலாளர் திரு.சி. திருஞானம், பொருளாளர் திரு. செ. பத்மநாதன். குழு உறுப்பினர்கள்: க சண்முகராசா, த. சண்முகதாசன், வி. பத்மநாதன், க. செந்திற்சேயோன், சி. சச்சிதானந்தம க. ஞானச்சந்திரன், கு. உதயகுமார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ரூபவாகினியில்
திரைப்படங்களை தெளிவாக கண்டுகளிக்க
உத்தரவாதத்துடன்
சென்னை - ரூபவாகினி
ஏரியல் பொருத்திக்கொள்ளவும்
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்
யாழ்ப்பாணம்.

## 'குடும்பத் திட்டத்தில் ஆயுள்வேத வைத்தியர்பங்கு'

### யாழ். அரசாங்க அதிபர் பேச்சு

[யாழ்ப்பாணம்]

''தேசிய வைத்தியமான சித்த ஆயுள்வேத யூனனி முறைகள் எம் நாட்டு மக்களால் ஆதரிக்கப்பட்டு நன்கு மதிக்கப்படுகின்றனர். இந்த வைத்தியர்களது பங்கு குடும்பத் திட்டத்தில் மிக முக்கியமானது சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் பங்கு பெறுத எந்த முக்கிய திட்டங்களும் வெற்றிபெற மாட்டாது''

இவ்வாறு யாழ். நகர மண்டபத்தில் நேற்று சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கான கருத்தடைச் சேவைத்திட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா குறிப்பிட்டார்.

சர்வதேச சனத்தொகை சேவைத் திட்ட தலைவர் திரு. டெரிலூயிஸ்தலைமையில்இந்த கருத்தரங்கு நடந்தது.

திட்டமிடல் பகுதி அதிகாரி திரு. எஸ். சிவதாசன். பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி) எஸ். வீ. பரமேஸ்வரஹம், டாக்டர் ரி. அருளானந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தின் பல இடங்களில் இருந்தும் பெருந்தொகையான ஆயுள்வேத வைத்தியர்கள் கலந்துகொண்டனர். [வெ - நி]

விரக்தியால் இளைஞன் தற்கொலை:

## 'வெளிநாட்டுவேலைமோகமும் ஏஜென்ஸிஏமாற்றும் அதிகரிக்கிறது''

-- மரண விசாரணை அதிகாரி

[மாவிட்டபுரம்]

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்ஸி ஒன்று பல மாதங்களாக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்காது ஏமாற்றி வந்ததால் மனமுடைந்த பத்தொன்பதுவயது வாலிபர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

பெரியவிளானைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் யேசுதாஸ் என்பவரே இவ்வாறு மரணமானவராவார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினர்.

காலமானவர் தமது நண்பர்கள் இருவரிடம் 23 ஆயிரம் ரூபா பணமும்பெற்றுத் தமது 10ஆயிரம் ரூபா பணத்தையும் சேர்த்து 33 ஆயிரம் ரூபாவை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக தெமட்டகொடையிலிருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சி ஒன்றிடம் செலுத்தினர்.

7 8மாதங்களாகியும் அந்த ஏஜென்சி வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்காமல் ஏமாற்றி வந்ததால் இந்த வாலிபர் மனமுடைந்திருந்தார் அத்துடன் இவரிடம் பணம் வழங்கிய நண்பர்களும் தமது பணத்தைத்தருமாறு நெருக்கினர். மல்லாகம் நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கு ஒன்றையும் தொடர்ந்து அவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவும் இருந்தது.

இவற்றையிட்டு மனம் நொந்த இவ்வாலிபர் நஞ்சருந்தி மரணத்தை தழுவிக்கொண்டார்.

தற்கொலை எனத் தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா, 'வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோகத்தினால் எதையும் சிந்திக்காது பணத்தை வாரி இறைக்கும் இளைஞர்களும், இளைஞர்களுக்கு ஆசை வார்த்தை காட்டிப்பணத்தை பெற்றபின் ஏமாற்றிப் பிழைக்கும் வேலைவாய்ப்பு ஏஜென்சிகளும் பெருகிவருகின்றனர். இறுதியில் இவ்வாறான மரணங்களுக்கும் இடம் ஏற்படுகிறது. ஆகவே இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விஷயத்தில் மிகுந்த கவனமெடுத்துச் சிந்தித்துச் செயலாற்றவேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்தார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சுப்பிரமணியம் சாட்சிகளை ஆஜர் செய்தார். [அ]

## அமைச்சரவைக் கூட்டம் நடக்காது

[கொழும்பு]

புதன்கிழமைகளில் நடைபெறும் வாராந்த அமைச்சரவை கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறமாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## ஹோம் பிறுன்ஸ் லிமிட் (யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னுதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்

II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறுன்ஸ் லிமிட்

82, கன்னுதிட்டி வீதி,

யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட்

463, காலி வீதி, கொழும்பு-3


## செல்வகௌரி மீண்டும் சாதனை

(யாழ்ப்பாணம்)

நூறு மீட்டர் தடைதாண்டும் ஓட்டப்போட்டியில், திருமதி செல்வகௌரி வரதகுமார் மீண்டும் சாதனை நிலைநாட்டியுள்ளார்!

யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுப்பிற்பகலியாழ் அமைச்சூர் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் இவர்கலந்து கொண்டார்.

நூறு மீட்டர் தடைதாண்டும் ஓட்டப்போட்டியில் 1980ல் புதிய இலங்கை (15·6 செக்கனில்) சாதனையைதிருமதி செல்வகௌரி ஏற்படுத்தி, நேற்று நடைபெற்றபோட்டியில் தனதுபழைய சாதனையை முறியடித்து புதிய சாதனையை (15.5செக்கன் நிலைநாட்டினுர்.

சுன்னுகத்தில்

## இன்று பிரேமானந்தா பஜனை

[யாழ்ப்பாணம்]

மாத்தளை பூபால கிருஷ்ண ஆச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி பிரேமானந்தா சுன்னுகம் ஆச்சிரமத்திற்கு இன்று வருகை தருவார்.

சுவாமி பிரேமானந்தாவுடன் செக்கோசலவாக்கியாவைச் சேர்ந்தவரும், சாயிபாபாவின் பிரதம சிஷ்யையுமான இந்திராதேவியும் வருவார்.

இன்று ஆச்சிரமத்தில் பஜனை நடைபெறும். இவர்கள் நாளையும் ஆச்சிரமத்தில் தங்கியிருப்பார்கள். [கு]

## என்னை ஏற்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சதந்திர பெரமுன, ஜனநாயக சோஷலிச முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளும், இடதுசாரித்தொழிற் சங்கங்களும் என்னை ஒன்று சேர்ந்து ஆதரிக்கின்றன நான் ஒரு பொதுவேட்பாளனுகவே உங்கள் முன் வந்திருக்கிறேன்.

### திருத்தத்துடன் புதிய அரசியலமைப்பு

''நான் ஜனுதிபதியாகப் பொறுப்பேற்றதும் பயங்கரவாத ஒழிப்புச்சட்டத்தை நீக்குவேன். பாராளுமன்றத்தைக் கலைத்து, விகிதாசாரத் தேர்தல் முறையை நீக்கிப் புதிய சில திருத்தங்களுடன் 1978 லுள்ள அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வருவோம்.

''குடியுரிமை நீக்கப்பட்ட 37 பேருக்கும் குடியுரிமை வழங்குவோம். வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கும் பாக்கிச் சம்பளத்துடன் வேலை வழங்குவோம்.''

### விநோதன் கோரிக்கை

திரு.கு.விநோதன் பேசுகையில்; மாவட்டசபைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடாததினுல், கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் சுதந்திரக் கட்சித் தலைவர்கள் தோன்றி கூட்டணிக்கு ஆதரவளித்தனரென்றும், அதேபோன்று, ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடாத கூட்டணியினர், சுதந்திரக்கட்சி ஜனுதிபதி வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுப்பதாகக் கூறினுர்.

முன்னுள் அமைச்சர் திரு. ரி.பி.இலங்கரத்ன, திரு. கே. பி. இரத்நாயக்கா, சுதந்திரக் கட்சி உப செயலாளர் திரு. விஜய தமாரணதுங்கா உட்பட பலர் பேசினுர்கள். [மா]

## இப்படியும் நடக்கிறது

அந்த வடுக்கள் இன்னும் மறையவில்லை.

கண்டன அறிக்கைகளினதும், சிபார்சுகளினதும் மை கூட காயவில்லை.

கொழும்பு - காங்கேசன்துறை ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது.

ரயிலுக்குள் சோடா, இளநீர், தோடம்பழம் வடை... நடமாட்டம்; கோட்டையிலிருந்தே ஆரம்பமாகிவிடுகிறது!

'ஊடுருவி'

## சிவகாசி தீக்குச்சுகள் இலங்கைக்கு ஏற்றுமதி

சிவகாசி, அக். 10

இலங்கைக்கு 40லட்சம் ரூபா பெறுமதியான தீக்குச்சுகளை சிவகாசி தீக்குச்சு உற்பத்தி ஒன்றியம் ஏற்றுமதி செய்ய விருப்பதாக ஒன்றியத்தின் தலைவர் திரு எஸ். ரங்கநாதன் அறிவித்துள்ளார்.

## பகலிலும்எரிகிறது

[கரவெட்டி]

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு முன்பாக பிரதான வீதியிலுள்ள மேக்குரி விளக்கு பகல் வேளையிலும் எரிந்து கொண்டிருக்கும் இம் மின் விளக்கு பகல்வேளையில் எரிவதனுல் அதற்குரிய மின்சார செலவும் மக்களிடம் இருந்து அறவிடப்படும் வரிப் பணத்தில் இருந்து அநியாயமாகப் போகிறது என்று இப் பகுதி மக்கள் பேசிக்கொள்கிறுர்கள்.

## மழை வேண்டி....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கல்துறை உயர் அதிகாரி அறிவித்துள்ளார்,

சென்னை கபாலீஸ்வரர் தேவஸ்தானத்தில் மழை வேண்டி விசேட பூசைகளும், இஸ்லாமிய அமைச்சர்கள், பிரமுகர்களால் மழை வேண்டி விசேட தொழுகைகளும் தொடர்ந்து நடத்தப்பட்டுவருகிறது. [உ]

## பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைச் சைவமகா சபையும், மாவையாதீனமும் இணைந்து இந்துநாகரீகத் துறையில் யாழ் பல்கலைக கழகத்தின் கலாநிதிப்பட்டம் பெற்ற பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயருக்குப் பாராட்டு விழா ஒன்றை இன்று மாலை மாவிட்டபுரத்தில் நடாத்துகின்றனர்.

பேராசிரியர் நா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இப் பாராட்டு விழாவில் திரு. நம. சிவப்பிரகாசம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி சி. க.சிற்றம்பலம், பண்டிதர் இ. நமசிவாயம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

## கொழும்பில் இன்று வேம்படி மகளிர் நாட்டியநாடகம்

[கொழும்பு]

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி அளிக்கும் இரு நாட்டிய நாடகங்கள் இன்று திங்கட்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

கல்லூரி அதிபர் திருமதி அ.இராசரத்தினம்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்குக் கடற்றெழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [அ]

## மரண அறிவித்தல்

### குருசுமுத்து செபமாலை

ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்ரரும், யாழ்ப்பாணம் மேர்க்கன்ரைல் பாதுகாப்புச் சேவை உரிமையாளருமான குருசுமுத்து செபமாலை 9-10-82ல் காலமானுர்.

அன்னரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக [11-10-82] இன்று திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்குத் திருப்பலியின் பின் புனித யாகப்பர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றூர், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

4807

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் சச்சிதானந்தம்

அப்புத்தளை இளைப்பாறிய பகிரங்க வேலைப்பகுதி ஓவசியர் சிற்றம்பலம் சச்சிதானந்தம் சிவபதமடைந்து விட்டார். இவர் தையல்நாயகியின் அன்புக்கணவரும் தியாகராசா பத்மாவதி, சிவகுருநாதன் திலகவதி, யோகானந்தன் (பிரான்ஸ்) சரவணபவானந்தன், உமாவதி, ஜெயானந்தன் (நிதிப்பொறுப்பாளர், சாம்பியா), சிவானந்தன் (ரோமு) ஆகியோரின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய ஓவசியர் இராசரத்தினம், மனோன்மணி தில்லையம்பலம், காலம்சென்ற பொன்னம்மா, நீர்ப்பாசன இலாகா பிரதிப் பணிப்பாளர் காலம்சென்ற அரியதுரை, இளைப்பாறிய ஆசிரியை சின்னம்மா நாகரத்தினம், நேசம்மா நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சட்டத்தரணி நடராசா, வயித்திலிங்கம் கனகாம்பிகை (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார் அன்னரது ஈமக்கிரியைகள் அராலி வடக்கில் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

4806

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.